**செ. கு. எண்: 069** **நாள்: 06.05.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K .பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 6.5.2018

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகா, விளக்குடியைச் சேர்ந்த திரு.கிருஷ்ணசாமி என்பவர் தனது மகன் கஸ்தூரி மகாலிங்கத்தை "நீட்" தேர்வு எழுத கேரள மாநிலம் எர்ணாகுளத்திற்கு அழைத்துச்சென்று அங்குள்ள விடுதியில் தங்கியிருந்த போது இன்று **(6.5.2018)** காலை மாரடைப்பு ஏற்பட்டு அங்குள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

உயிரிழந்த திரு. கிருஷ்ணசாமியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய உத்தரவின் பேரில், திரு. கிருஷ்ணசாமி அவர்களின் உடலை அவரது சொந்த ஊருக்கு எடுத்துச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து உதவிகளையும் உடனடியாக செய்யுமாறு, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் கேரள அரசின் தலைமைச் செயலாளர் அவர்களை தொடர்பு கொண்டு, எர்ணாகுளம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சபருல்லா அவர்களுக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இதன் அடிப்படையில் எர்ணாகுளம் மாவட்ட ஆட்சித் தலைவர் அனைத்துவித நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொண்டு வருகிறார்.

நீட் தேர்வு எழுதி முடித்தபின், மாணவன் கஸ்தூரி மகாலிங்கம் அவரது தந்தை கிருஷ்ணசாமியின் உடலை சொந்த ஊர் கொண்டு வருவதற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றினை கேரள மாநிலத்திலுள்ள எர்ணாகுளத்திற்கு அனுப்பியுள்ளேன்.

உயிரிழந்த திரு. கிருஷ்ணசாமி அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் மூன்று லட்சம் வழங்குவதற்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**